மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்துக் கொண்டு, அதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

138—

பாதுகாப்பு வசதி

***119827—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத் தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் மின் வேலி, குழி, தடுப்புச் சுவர், குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

போளூர் தொகுதி, ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத் தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் யானைகளிடமிருந்து பொது மக்கள் மற்றும் விவசாய நிலங்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், அவையில் இல்லை. மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே வருகின்ற ஜமுனாமுத்தூர், படவேடு, செண்பகத்தோப்பு, அமிர்தி ஆகிய பகுதிகளில், தற்பொழுது காடுகளிலேயிருந்து வரக்கூடிய யானைகளினால் மக்களின் உயிருக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 4 பேர் யானையின் தாக்குதலினால் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்பொருட்டு, அந்தப் பகுதியிலே தடுப்புச் சுவர்கள், மின் வேலி அமைக்க இந்த அரசு சிறப்பு முன்னுரிமை

அளித்து ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலேயே, அதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். அந்தப் பகுதியிலே எங்களுடைய துறையின் கணக்கெடுப்புப்படி தவறி வந்த 8 யானைகள் உலாவிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அந்தப் பகுதியிலே 12 கிலோ மீட்டர் தூரம் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டிக்கிறது. வரும் காலத்திலும் இன்னும் தேவையான இடங்களிலே அதைப்போன்ற சூரிய ஒளியிலிருந்து இயங்குகின்ற சூரிய மின் வேலி அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலம் வந்தாலே தினச் செய்திகளில், காட்டு யானை கிராமத்திற்கு வந்தது, காட்டுப் பன்றி கிராமத்திற்கு வந்தது, மான்கள் கிராமத்திற்கு வந்தன என்ற செய்திகள்தான் வந்து கொண்டிருக்கின்றன. இந்த வன விலங்குகளெல்லாம் ஏன் கிராமத்திற்கு வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். குறிப்பாக, கோடைக் காலங்களில் குடிநீர் வேண்டித்தான் அந்த விலங்குகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. எனவே, ஒவ்வொரு வனப் பகுதிகளிலும் குளங்கள், குட்டைகளை ஏற்படுத்தி, அதில் தண்ணீர் டேங்க் கட்டி, அதில் தண்ணீரை நிரப்ப வேண்டும். அரசு அதுபோன்ற திட்டம் ஏதும் வைத்திருக்கின்றதா? இதுபோன்று, வன விலங்குகளுக்குத் தண்ணீர் கொடுக்க இந்த அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கேள்வியிலேயே, வன விலங்குகளுடைய எண்ணிக்கை தமிழகத்திலே இப்பொழுது அதிகரித்து இருக்கிறதென்பது நன்கு

தெரிய வருகிறது. சில நேரங்களிலே வன விலங்குகள் கோடைக் காலங்களிலே வெளியே வருகின்றன. ஆனால், அவற்றிற்குத் தேவையான தண்ணீரை நாங்கள் தொட்டிகள் கட்டி நிரப்பி, கொடுக்கிறோம். தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இங்கே கசிவுநீர்க் குட்டைகளும், தடுப்பணைகளும் கட்டப்பட்டு, மழைக் காலங்களில் வருகின்ற அந்தத் தண்ணீரெல்லாம் அங்கே தேக்கி வைக்கப்படுகின்றது. சில நேரங்களிலே, காய்ச்சலின் காரணமாக அங்கே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதற்குத் தேவையான உணவு அண்மையிலே, பக்கத்திலே இருக்கின்ற காடுகளில் கிடைக்கின்ற காரணத்தால் அவை வருகின்றன. அதைத் தடுப்பதற்கு எங்களுடைய காவலர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் அதிலே ஈடுபட்டிருக்கின்ற மற்ற அலுவலர்கள் எல்லாம் பொது மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கிறார்கள். அதுபோன்று வருகின்ற வன விலங்குகளையெல்லாம் மீண்டும் காட்டுக்குள்ளேயே அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் அதற்கு சூரிய மின் வேலி அமைப்பதில்லை. அந்த ஆட்சியிலே 5 ஆண்டு காலத்திலே 62 கிலோ மீட்டரிலேதான் இந்த சூரிய மின் வேலி எல்லாம் அமைத்திருந்தார்கள். இதையும் மீறி வரக்கூடாது என்பதற்குத்தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 1,167 கிலோ மீட்டருக்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) இதைப்போல, தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்திலே எடுக்கப்படுகின்றன.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

139—

புறவழிச் சாலை

***30345—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS